Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 152 திங்கட்கிழமை ஒக்ரோபர் 23 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## துப்பாக்கிச் சூடு: ஒருவர் கைது


அரியாலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞனுடன் பயணித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)



# அரியாலையில் துப்பாக்கிச் சூடு!

## இளைஞன் பலி



அரியாலைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ் அரியாலை கிழக்கு உதயபுரம் முதலாம் குறுக்குத் தெருவில் நேற்றுப் பிற்பகல் 02.30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய டொன் பொஸ்கோ றிக்மன் எனும் இளைஞன் படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று இரவு 09.30 மணியளவில் அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. அதிகளவான இரத்தப் போக்கு ஏற்பட்ட நிலையிலேயே இளைஞனின் மரணம் நிகழ்ந்துள்ளதாக

07

## இராணுவச் சிப்பாய் விபத்தில் பலி

முல்லைத்தீவில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் ட்ரெக்டர் வாகனத்தில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இவ் விபத்துச் சம்பவத்தில் எம்பிலிபிடியவைச் சேர்ந்த 34 வயதான இராணுவச் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்துச் சம்பவம் குறித்து முல்லைத்தீவுப் பொலிஸாரினால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)


## உள்ளூராட்சித் தேர்தல் 'தை'யில் இல்லையாம்




உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களை எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் பிற்போடப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடைபெறப்போகிறது என்ற தோற்றம் சில நாட்களுக்கு முன்னர் இருந்தது. இதன்படி ஜனவரி 20ஆம் திகதி அந்த தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. எனினும் அது தற்போது பின்தள்ளிப்போகலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மிக நீண்ட கால கோரிக்கையான நுவரெலிய மாவட்டத்தின் பிரதேசசபைகளை அதிகரிக்கும் திட்டம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் தாமத தகவலை உள்ளூராட்சித்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா மறுத்துள்ளார். நுவரெலிய பிரதேசசபைகளுக்கான பரிந்துரைகள் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தமானிப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## சடலத்தைப் பார்வையிட்ட நீதிபதி விசாரணைக்கு உத்தரவு



அரியாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியாகிய இளைஞனின் சடலத்தைப் பார்வையிட்ட யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் பொலிஸ் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் நேற்று இரவு 9.30 மணியளவில் உயிரிழந்தார். அதன் பின்னராக வைத்தியசாலைக்கு விஜயம் செய்த நீதிபதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கும் சென்று பார்வையிட்டதோடு விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (எ-04)

## அரசியல் கைதிகளுக்காக திடீர் ஆர்ப்பாட்டம்



அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றுப் பிற்பகல் யாழில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. நீண்ட காலமாக மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான விவேகானந்தனூர் சதீஸ் எழுதிய "சிறையிலிருந்து சிங்களச் சகோதரனுக்கு" நூல் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றுள்ளது. இந்த நிலையில் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி முன்றலில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கொழும்பு, மகசீன் சிறைக்கைதியான நூலாசிரியரின் தாயார், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூரத்தி, சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (எ)

## அரசியல் கைதிகள் ஆபத்தான நிலையில்

அனுராதபுரம் சிறையில் 28 வது நாளாக உண்ணாவிரதத்தினில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் மூவரது உடல்நிலை மீண்டும் மிகமோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இதனையடுத்து அவர்கள் மூவரும் பலாத்காரமாகச் சிறை அலுவலர்களால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர்களிற்கு சேலைன்கள் ஏற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களது பேசும் தகவு பெரும்பாலும் செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளத்தில் குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு



வவுனியாவில் குளத்துக்கு குளிக்கச் சென்றவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது வவுனியா, ஈச்சங்குளம், மறவன்குளம் பகுதியிலுள்ள நடராசா சந்தனகுமார்(36) என்ற இளைஞன் இன்று பிற்பகல் வேளையில் கல்மடு குளத்திற்கு குளிக்கச் சென்றுள்ளார்.

இதையடுத்து மாலை அக்குளத்துக்கு குளிக்கச் சென்ற வேறொருவர் குறித்த நபர் குளத்தில் சடலமாக இருப்பதை அவதானித்துள்ளதுடன், இது குறித்து ஈச்சங்குளம் பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதேவேளை, குறித்த நபருக்கு வலிப்பு வருவதாக அவரது உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். தற்போது சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## கையூட்டுப் பெற்ற பொலிஸார் சிக்கினர்

2 ஆயிரம் ரூபா கையூட்டல் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் காவற்துறைப் பிரிவுக்குட்பட்ட போக்குவரத்து பிரிவில் பணியாற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த வேளை கையூட்டல் பெற்றதாக முறைப்பாடு ஒன்று கிடைத்ததனையடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இரு பொலிசாரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது. (உ)

## பகலில் போராட்டம் இரவில் பால் திருட்டு

கொழும்பு, ஒக்.23

பகல் நேரங்களில் ஊழல் எதிர்ப்பு போராட்டங்களில் முன்நிற்கும் நபர் ஒருவர் இரவு நேரத்தில் தொழிற்சாலையில் திருடும் போது மாட்டிக் கொண்ட சம்பவம் கம்பளையில் நடந்துள்ளது. இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான பால் நிறுவனத்தின் கம்பளை பால்சேகரிப்பு நிலைய ஊழியர் ஒருவரே இவ்வாறு வசமாக மாட்டிக் கொண்டுள்ளார்.

இரவில் சேகரிப்பு நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்படும் பாலை , பெரிய பாத்திரங்களில் நிரப்பி முச்சக்கர வண்டியில் கடத்திச் செல்வதை குறித்த நபர் பல நாட்களாகச் செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில்சந்தேகம்கொண்டு கண்காணித்த அதிகாரிகளிடம் சந்தேக நபர் கையும், களவுமாக மாட்டிக் கொண்டுள்ளார். இதனையடுத்து, சந்தேக நபர் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஆ)

## தே.அ.அட்டைக்காக- இனிமேல் கொழும்புக்குப் போகத் தேவையில்லை

கொழும்பு, ஒக்.23

ஒரே நாளில் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு இனி கொழும்பிற்கு வரத் தேவையில்லை என உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. மாவட்ட மட்டத்தில் தேசிய அடையாள அட்டைகளைப்பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், தேசிய ஆட்பதிவுத் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தின் பணிகள் பன்முகப்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், அந்தந்த மாவட்டச் செயலகங்களில் ஒருநாள் சேவையின் அடிப்படையில் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உள்விவகார அமைச்சர்எஸ்.பீனாவின்னவுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும், நாடு முழுவதிலும் தேசிய அடையாள அட்டை இல்லாத பத்து இலட்சம்பேர் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## விமானத்தில் சிகரெட் புகைத்த மகிந்த

ரஷ்யாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இலங்கை பிரதிநிதிகளில் ஒருவர் விமானத்தில் சிகரெட் புகைத்துள்ளார்.

கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் இலங்கை பிரதிநிதிகள் குழு, ரஷ்யா நோக்கிச் சென்றனர். இலங்கை குழுவில் சுய வேலைவாய்ப்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் மஹிந்த கஹதகமகே விமானத்தில் சிகரெட் புகைத்தபோது விமான அதிகாரிகளிடம் சிக்கியுள்ளார். அதன் பின்னர் விமானம் டோஹா சர்வதேச விமானத்தில் தரையிறங்கிய போது மஹிந்த கஹதகமகேவை 6 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து அந்நாட்டு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவரிடமிருந்து மூன்றரை லட்சம் ரூபாய் தண்டபணம் அறவிடப்பட்டுள்ளது. எனினும் கட்டார் நிறுவனம் குறித்த நபரை தமது விமானத்தில் ஏற்றிச் செல்ல அனுமதி மறுத்த நிலையில் அவர் வேறு விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் ரஷ்யா நோக்கி சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## தன் வீட்டுக்கு தீ மூட்டிய இளைஞன்

பேருவளை - காலவில பிரதேசத்தில் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் தனது வீட்டிற்குத் தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

குறித்த இளைஞரை தனிமையில் விட்டு, பெற்றோர் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில், பெற்றோர் வீடு திரும்புவதற்கு தாமதமாகியமையினால், கோபமடைந்த குறித்த இளைஞர் வீட்டில் இருந்த கடதாசிகளைப் பயன்படுத்தி வீட்டிற்கு தீ வைத்துள்ளார். இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகளால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அளுத்கம தீயணைப்பு பிரிவும், பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். மேலும், சம்பவம் குறித்து அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (உ)

# கர்ப்பிணிப் பெண் மரணம் வைத்தியசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



மகப்பேற்றுக்காக தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து நேற்றுக் காலை குறித்த தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கூழாவடி நான்காம் குறுக்கு வீதியை சேர்ந்த 45 வயதுடைய திருமதி லதாசிறி சிவகுமார் என்னும் பெண் பிரசவத்திற்காக மட்டக்களப்பின் பிரபல தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பிரபல மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் பரிசோதனை செய்து பின்னர் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார். பின்னர் அப்பெண் சத்திர சிகிச்சை மூலம் குழந்தையினை பிரசவித்துள்ளார். அங்கு குழந்தை பிறந்து இரு மணி நேரத்தின் பின் தாயின் உடலில் சில மாற்றங்கள் தென்பட்டதாகக் கூறப்படுகின்றது. பின்னர் அத்தனியார் வைத்தியசாலையினர் முறையாக சிகிச்சை அளிக்கவில்லை எனக் கூறி குறித்த பெண்ணை உறவினர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கு அவர் இறந்துவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதேவேளை சத்திர சிகிச்சையின் போது ஏற்பட்ட தவறின் காரணமாக ஏற்பட்ட இரத்தக் கசிவினாலேயே அப்பெண் மரணமானதாக அரச வைத்தியசாலையில் கூறப்பட்டதாக உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக கறுப்பு உடை அணிந்தவாறு சடலம் கொண்டுவரப்பட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## ஆறு பிள்ளைகளின் தாய் மர்ம மரணம்

மட்டக்களப்பு, தாழங்குடாவில் ஆறு பிள்ளைகளின் தாயொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

47 வயதுடைய விஜயலட்சுமி என்ற பெண் வீட்டில் நேற்று சடலமாகக் கிடப்பதை கண்ட அவ்வீட்டிலுள்ளவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, குறித்த வீட்டுக்கு சென்ற பொலிஸார், பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளதுடன், ஆரம்பக் கட்ட விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். மேலும், குறித்த பெண்ணின் மரணம் கொலையா, தற்கொலையா என்ற சந்தேகத்தில் தடயவியல் அதிகாரிகள் அங்கு வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார், தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

திங்கள், 23 ஒக்ரோபர் 2017 ethirolimedia@gmail.com

## விடிவு வரப்போவதில்லை

'ஆட்சிக்கு வருகிறோம். அரசியலமைப்பை மாத்து றோம்' என்று மார்தட்டிக் கொண்டு அதிகாரக்கதிரையில் அமர்ந்த நல்லாட்சி அரசு, இரண்டு வருடங்கள் தாண் டியும் இன்னும் உருப்படியாக எதையும் பிடுங்க முடி யாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. மிக நீண்ட இழு பறியின் பின்னர் புதிய அரசியலமைப்பை நாடாளு மன்றில் சமர்ப்பிக்க அரசு முடிவெடுத்த போது, குறுக்கே வந்து நிற்கிறார்கள் மகாநாயக்கர்கள்.

எந்த அரசு பதவியில் இருந்தாலும், இலங்கையில் எது நடக்க வேண்டும், எது நடக்கக் கூடாது என்பதை மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களில் மகாநாயக்கர்களே தீர்மானிக்கின்றனர். அவர்களை மீறி அணுவும் அசையாது இலங்கையில்.

பௌத்த மதத்தின் இவ்விரு உயர் பீடங்களையும் மீறி பண்டா–செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஆனால் பின்னர் மகாநாயக்கர்களின் உக்கிர எதிர்ப்பால் அது கிழித்தெறியப்பட்டது. பிக்கு ஒருவரின் துப்பாக்கி வேட்டுக்கு அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்க பலி யானார்.

எப்போதெல்லாம் இனப்பிரச்சினைக்கான தீர்வென் னும் வெண்ணெய் திரண்டு வருகிறதோ, அப்போதெல் லாம் தாழியை உடைப்பதையே அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளன.

ஆனால் இம்முறை புதிய அரசியலமைப்பின் உரு வாக்கத்துக்கு அஸ்கிரிய, மல்வத்த பீட மகாநாயக்கர்கள் தங்கள் பூரண ஆதரவை வழங்கியிருந்தனர். அதனால் சில அமைச்சுப் பதவிகளை வீசியெறிந்து, எதிரணியில் இருக்கும் சிலரைத் தம் வசமாக்கி விட்டாலே போதும், அரசியலமைப்பு சுலபமாக நடைமுறைக்கு வந்துவிடும் என்றே மைத்திரி–ரணில் கூட்டு நினைத்தது. ஆனால், மெர்சல் படத்தின் கடைசி நேரத்தில் ஒரு புறாவுக்காக படத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த விலங்குகள் நலவாரி யம் போல, அரசியலமைப்பின் இறுதி வரைவுக்கு சில நாள்கள் மட்டுமே இருக்கையில், போர்க்கொடி தூக்கி யிருக்கின்றன அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள். இவ்விரு பீடங்களினதும் மகாநாயக்கர்கள் நாட்டில் இல்லாத வேளையில், புதிய அரசியலமைப்புத் தேவையில்லை என்ற அறிக்கையை மகாநாயக்கர்களின் சார்பில், அவர்களின் செயலாளர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இருப்பினும் 'மக்களைக் குழப்பவே இவ்வாறான பொய்ச் செய்திகள் பரப்பப்படுகின்றன. மகாநாயக்கர்கள் நாட்டில் இல்லாதபோது அவர்களின் பெயரைப் பாவித்து சிலர் மக்களைத் திசை திருப்புகிறார்கள்' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாட்டில் சொல்லி, வாய் மூடுவதற்குள், "எங்கள் சம்மதத்துடனேயே அந்த அறிக்கை வெளியிடப்பட்டது. புதிய அரசியலமைப்பு நாட்டுக்குத் தேவையில்லை" என மகாநாயக்கர்களே வெளிநாட்டில் இருந்தபடி வாய் திறந்து அறிவித்தார்கள்.

எனவே புதிய அரசியலமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதில், பெரும் சிக்கலை அரசு சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது. நாடாளுமன்றில் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ள வைத்தாலும், பின்னர் அதனை மக்களின் அங்கீகாரத்துக்காக சமர்ப் பிக்கும் போது, நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்கள், மகாநாயக்கர்களின் சொற்படியே நடப்பார்கள். அப்படி நடந்தால், நிச்சயமாக சர்வசன வாக்கெடுப்பில், புதிய அரசியலமைப்பு தோற்கடிக்கப்படும். அதன் பின் னர் குப்பைத் தொட்டிக்குள் புதிய அரசியலமைப்பைக் கடாசிவிட்டு, இப்போதிருக்கும் பழைய அரசியலமைப் பையே தொடர வேண்டியதுதான்.

மகாநாயக்கர்களின் திடீர் மனமாற்றத்துக்கு மகிந்த அணியினர் போட்ட தூபமே காரணம் எனச் சொல்லப்படு கின்றது. 'தானும் உண்ணாமல் அடுத்தவரையும் உண்ண விடாத' வைக்கோல்போர் நாயைப் போல, தங்களால் முடியாத அரசமைப்பு மாற்றத்தை மைத்திரி–ரணில் கூட்டும் செய்யக் கூடாது என்பதே மகிந்த அணியின் திட்டம். அப்படிச் செய்வதன் மூலம் 'இது எதற்கும் கையாலாகாத அரசு' என்ற எண்ணம் மக்களிடத்தே பரவி, ஆட்சி மாற்றத்துக்கும் வழி சமைக்கக் கூடும். எதைச் செய்தாவது பதவிக்கு மீண்டும் வரத்துடிப்பவர்களும், அவர்களின் சொல் கேட்டு நடக்கும் மகாநாயக்கர்களும் இருக்கும் வரை இலங்கைக்கு விடிவு வரப்போவதில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# வாள்வெட்டுக் கும்பல் மீண்டும் அட்டகாசம்




யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ். கொக்குவில் பகுதியில் மீண் டும் கறுப்புத் துணியால் முகங்களை மறைத்துக் கொண்டு வந்த வாள்வெட் டுக் குழுவினர் தையலகமொன்றினை சேதப்படுத்தி அட்டகாசம் செய்துள் ளனர்.

குறித்த சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றுள்ளதுடன், மோட்டார் சைக் கிளில் வாள்கள் மற்றும் பொல்லு களுடன் வந்த மூவரே இதனை மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நேற்று முன்தினம் இரவு 07.30 மணியளவில் மோட்டார் சைக்கி ளொன்றில் கறுப்புத் துணிகளால் முகங்களை மறைத்துக் கொண்டு மூன்று பேர் கொண்ட அடையாளம் தெரியாத குழுவொன்று வந்துள்ளது.

அந்தக் குழு யாழ். கொக்குவில் சந்திக்கு அருகிலுள்ள தையல் நிலைய மொன்றுக்குள் திடீரென புகுந்து தைய லகத்தின் முன்பகுதியைக் கடுமையா கத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது.

வாள்வெட்டுக் குழுவினர் தையல் நிலையத்துக்குள் உட்புகுவதை அவ தானித்த தையல் நிலையத்துக்குள் பணி புரிந்து கொண்டிருந்த ஆண், பெண் பணியாளர்கள் பின்புறக் கத வால் ஓடித் தப்பியுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஒரு மாதத் துக்கு முன்னர் இதே பகுதியிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையமொன் றின் மீதும் இரவு வேளையில் புகுந்த வாள்வெட்டுக் குழு கடும் தாக்குதல் நடத்திச் சேதப்படுத்தியிருந்தது.

கொக்குவிலில் வாள்வெட்டுக் குழுவினரின் அட்டகாசம் அண்மைக் காலமாக அதிகரித்திருக்கும் நிலை யில் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# சங்குப்பிட்டியில் மோதிய கார்கள்

### நேற்றுக் காலை சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக்.23

சங்குப்பிட்டி பாலத்தில் எதிர் எதிரே வந்த கார்கள் மோதி விபத்துக்குள்ளான தில் இரு கார்களும் பலத்த சேதமடைந் தன. ஆயினும் தெய்வாதீனமாக அதில் பயணம் செய்தவர்கள் உயிர் தப்பியுள் ளனர்.

நேற்று காலை 8 மணியளவில் சங் குப்பிட்டி பாலத்தில் கார் ஒன்று வேறு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டுள் ளது.

அப்போது எதிரே வந்த காருடன் மோதுண்டு கார் தடம்புரண்டு விபத்துக் குள்ளாகியுள்ளன.

இதன்போது, காரில் பயணம் செய்தவர்கள் சிறு காயங்களுடன் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

மேலதிக விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# விபுலானந்தர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன் னெடுக்கும் சுவாமி விபுலானந்தர் நினை வரங்கம் நிகழ்வு நல்லை ஆதீனக் கலா மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முக தாஸ் தலைமையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் இரா.செல்வவடிவேலும் வாழ்த்து ரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம் பந்த பரமாசாரிய சுவாமிகளும் நிகழ்த் துவர்.

தமிழியல் வளர்ச்சியில் ஈழத்து அறிஞர்களின் வகிபாகம் என்ற கருப் பொருளில் நடைபெறவுள்ள இவ் வரங்கத்தில் 'சுவாமி விபுலானந்தர்' என்ற பொருளில் தென்கிழக்குப் பல் கலைக்கழக முதுநிலை விரிவுரையா ளர் கலாநிதி க.இரகுபரனும், 'சதாவ தானி நா.கதிரைவேற்பிள்ளை' என்ற பொருளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரி விரிவுரையாளர் கலா நிதி சி.பத்மராஜாவும், 'வண.தனிநாய கம் அடிகள்' என்ற பொருளில் தென் னிந்தியத் திருச்சபையின் ஓய்வுநிலை பேராயர் அதிவண. கலாநிதி சு.ஜெப நேசன் அடிகளாரும், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரி வுரையாளர் கலாநிதி திருமதி ஜெய லஷ்மி இராசநாயகமும் கருத்துரை வழங்குவர். தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ச.லலீசன் நன்றியுரை வழங்குவார். (ஆ)

# ஆட்சிக்கு வர ஆசை!

## கூட்டு எதிர்க்கட்சி மீது சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.23

மகா சங்கத்தினருக்கிடையில் பேதங்களை உருவாக்கி, ஆட்சிக்கு வரவேண்டும் என கூட்டு எதிர்க் கட்சி முயற்சிக்கின்றது என அமைச் சர் சஜித் பிரேமதாச குற்றம்சாட்டி யுள்ளார்.

திஸ்ஸமஹாராம, நெதிகம்வில வில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"மக்களின் வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த நல் லாட்சி அரசாங்கம் கடமைப்பட் டுள்ளது.

கடந்த அரசாங்கம் அம்பாந்தோட் டையில் தோல்வியடைந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்ததே தவிர, அந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முன்வரவில்லை" என வும் அவர் தெரிவித்தார். (ஆ)

# சீனக் கண்காட்சி கொழும்பில்!

கொழும்பு, ஒக்.23

சீன உற்பத்திக் கண்காட்சி கொழும்புக் கண்காட்சிகள் மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

சீன உற்பத்திகளை இங்கு சலுகை விலையில் பெற்றுக் கொள்ள முடி யும் என்றும், இந்தக் கண்காட்சி 24 ஆம் திகதி வரை இடம்பெறும் என வும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளார்கள். (ஆ)

## இன்று நாளும் கோளும்

23.10.2017 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 06 ஆம் நாள்

சதுர்த்தி முழுவதும் | அனுசம் பி.ப. 03.02 மணி வரை | சித்தயோகம் | கரிநாள் | விநாயக சதுர்த்தி

இராகுகாலம் 07.32 - 09.02 | சுபநேரம் 12.02 - 01.32 | எமகண்டம் 10.32 - 12.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிம்மதி | ஆர்வம் | முயற்சி | பாசம் | ஓய்வு | வெற்றி | நன்மை | சிந்தனை | செலவு | அராய்ச்சி | வரவு | சாதனை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் ஐவர் பலி




கொழும்பு, ஒக்.23

மூன்று வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துகளில் ஐவர் பலியாகியுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில், நேற்றுப் பிற்பகல், கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால், வாகனத்தில் பயணித்த 41 மற்றும் 55 வயதுடைய இருவர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்குடா வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வாழைச்சேனை, நாகதம்பிரான் கோவில் வீதியைச் சேர்ந்த செல்வகுமார் கவிதன் (18) என்பவரே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கொட்டதெனியாவ, திவுலுபிட்டிய வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றின் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் பலியாகியுள்ளனர்.

இச்சம்பவத்தில் 17 மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் இருவரே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஆ)

## சுகாதார சேவை ஊழியர்கள்
# அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.23

சுகாதார சேவை ஊழியர்களின் ஒன்றிணைந்த அடையாள வேலை நிறுத்தம் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அரசாங்கப் பதிவு பெற்ற மற்றும் உதவி மருத்துவர்கள், தாதியர், மருத்துவத் துறை பணியாளர்கள், உள்ளிட்ட சுகாதார சேவையின் அனைத்துத் துறை ஊழியர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு சுகாதார சேவையை விட, கீழ் நிலையில் இருந்த அரச சேவைகளின் பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிய அமைச்சரவை, சுகாதார சேவை ஊழியர்களுக்கு இதுவரை சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

இதன் காரணமாக சுகாதார சேவை ஊழியர்கள் ஏனைய அரச ஊழியர்களை விடக் குறைவான ஊதியத்தையே பெற்று வருவதாக ஒன்றிணைந்த சுகாதார சேவை ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் 26 ஆம் திகதி அனைத்து ஊழியர்களையும் இணைத்து அடையாள வேலை நிறுத்தமொன்றை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 26 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் 27 ஆம் திகதி காலை 7 மணிவரையான ஒரு அடையாள வேலை நிறுத்தம் தொடர்பில் சுகாதார சேவைகள் ஊழியர் சங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது. இதன்போது, அரசாங்க மருத்துவமனைகள் உள்ளிட்ட எந்தவொரு சுகாதார சேவையும் நடைபெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டன் போகிறார் இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஒக்.23

லண்டனுக்கான 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் இன்று திங்கட்கிழமை மேற்கொள்ளவுள்ளார்.

லண்டனில் நடைபெறவுள்ள உலகத் தமிழர்கள் ஒன்று கூடலில் கலந்து கொள்வதற்காகவே குறித்த விஜயத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது லண்டனில் தொடர்ந்து 5 நாட்கள் தங்கி இருக்கும் கல்வி இராஜாங்க அமைச்சர் அங்கு பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பெ.சந்திரசேகரனின் மறைவுக்குப் பின்னர் கைவிடப்பட்ட உலகத் தமிழர்கள் ஒன்று கூடல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

# 6 படகுகள் விடுவிப்பு

கொழும்பு, ஒக்.23

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட ஆறு விசைப் படகுகள் காரைக்கால் மீன்பிடித் துறை முகத்துக்கு கடந்த சனிக்கிழமை கொண்டு செல்லப்பட்டுள்ளன.

காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் 6 விசைப்படகுகள் கடந்த 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் எல்லை தாண்டியதாகக் கூறி, இலங்கை கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டன. இவற்றை மீட்டுத் தருமாறு மீனவர்கள் இந்திய மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், இலங்கை வசமிருந்த 42 படகுகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. இதில், காரைக்கால் பகுதியைச் சேர்ந்த படகுகளும் அடங்கும்.

இவற்றை மீட்டுவருவதற்காக காரைக்காலில் இருந்து ஆறு படகுகளில் 36 மீனவர்கள் இலங்கை வந்தனர். அவர்கள், இலங்கைக் கடற்படையினரின் வழிகாட்டுதலோடு, விடுவிக்கப்பட்ட 6 படகுகளுடன் வெள்ளிக்கிழமை சர்வதேச கடற்பகுதிக்குச் சென்று, சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் தமிழகம் சென்றடைந்தனர். (ஆ)

# விஷமானது உணவு 6 வயதுச் சிறுமி சாவு

கொழும்பு, ஒக்.23

உணவு விஷமானதால் ஏற்பட்ட உபாதை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவரில் 6 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் விசேட விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜாஎல - உதம்மிட்ட பிரதேசத்தை சேர்ந்த 54 பேர் கொண்ட உறவினர்கள் குழுவொன்று கஹடகஸ்கிலிய பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டுள்ளனர்.

திருமண வீடு நோக்கிச் செல்லும் போது வீதியிலுள்ள உணவகம் ஒன்றில் தேநீர் அருந்தி விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் வேறு ஒரு உறவினர் வீட்டுக்குச் சென்று இரவுச் சாப்பாட்டை உண்டுள்ளனர்.

அதன் பின்னர் ஏற்பட்ட வயிற்று வலி மற்றும் வாந்தி காரணமாக கம்பளை வைத்தியசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை பெற்று வந்தவர்களில் 6 வயதுடைய சிறுமி உயிரிழந்துள்ளார். (ஆ)

## கஞ்சாக் காருடன்
# மோதிய அரசியல்வாதி



கொழும்பு, ஒக்.23

முன்னாள் பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன கொஸ்கம பகுதியில் நேற்றுக்காலை விபத்தொன்றில் சிக்கியுள்ளார்.

அவர் பயணித்த காரொன்று அதற்கு எதிர்த்திசையில் பயணித்த வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, சிறு காயங்களுக்கு உள்ளான கீதாஞ்சன அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, விபத்துடன் தொடர்புடைய மற்றைய வாகனத்தில் இருந்து 4 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன், சம்பவம் தொடர்பில் 28 மற்றும் 31 வயதான இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாளிகாவத்தை மற்றும் தல்துவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.



## தொட்டால் குற்றமாம் .

இடைக்கிடை நல்ல சுருட்டுக் குடிக்க வேணுமெண்டு நினைச்சா, வேறை ஒண்டும் செய்ய மாட்டன். சைக்கிளை எடுப்பன். உழக்கிக் கொண்டு நேரை என்ரை பள்ளிக்கூடத்துச் சினேகிதன் சின்னத்துரை வீட்டை போவன். என்னைக் கண்ட உடனை ஆளுக்குத் தெரியும். "இரு மச்சான்" எண்டுசொல்லிப் போட்டுச் சொண்டு ஒண்டோடை ஒண்டு ஒட்டிறமாதிரி சீனிபோட்டு ஒரு பசுப்பால் ரீ தருவான். பிறகு கொஞ்ச நேரம் பழைய பள்ளிக்கூடக் கதை கதைப்பம். அதிலை பத்தும் பலதும் வரும். பிறகு எழும்பிப் போவன். போய்ப் புகையிலைப் பாடத்துக்கை கையை விட்டு ஒரே இழுவை. நல்ல கிரிமாற்றுப் பிடிச்ச மடத்தலாப் பாத்து ஒண்டை எடுத்துக் கொண்டு வந்து அப்பிடியே சுத்திப் போட்டுத் தருவான். காசும் வேண்டான். நல்லதும் கிடைக்கும். அதோடை காசும் மிச்சம்.

நேற்றைக்கும் நல்ல சுருட்டொண்டு பத்திற ஆசை வந்திட்டுது. சின்னத்துரை வீட்டுக்குப் போவிட்டு வாற வழியிலை 'விநாசித் தம்பி அப்பு கொஞ்சம் நில்லுங்கோ" எண்டு மறிச்சாள் பவளத்தின்ரை பேத்தி.

இப்பதான் ஆறு அல்லது ஏழு படிப்பாள் எண்டு நினைக்கிறன். என்னை டபிள் ஏத்தக் கேக்கப் போறாளோ? என்ன வில்லங்கமோ? எண்டு பயந்து சைக்கிளை நிப்பாட்டாமைப் போனன். பிறகும் கூப்பிட்டாள். 'நிப்பாட்டாமல் போனால் வில்லங்கம்" எண்டு கத்தினாள். பயத்திலை சைக்கிளை நிப்பாட்டி நிவேசிலை போனன்.

"அப்பு ! பாலியல் துஷ்பிரயோகம் எண்டால் என்ன ?" எண்டு என்னைக் கேட்டாள். 'தெரியாது எண்டன்". அப்பிடித் துஷ்பிரயோகம் செய்யிறாக்களுக்கு என்ன தண்டனை தெரியுமோ? எண்டாள்.

'எடி பிள்ளை சிவனே எண்டு என்ரை பாட்டிலை போய்க் கொண்டிருக்கிற என்னைப் பாத்து இந்த இழவுகளையெல்லாம் ஏன் கேக்கிறாய்?" எண்டன்.

'ஒரு ஆண் ஒரு பெண்ணை அவையின்ரை அனுமதி இல்லாமல் அவயைத் தொடுகிறதும் பாலியல் துஷ்பிரயோகம் தான்" எண்டு இண்டைக்குப் பள்ளிக்கூடத்திலை சொல்லித் தந்தவை. நல்ல சிரியாள் கண்டனியளோ? எண்டு ரீச்சர் என்னைக் கேட்டா. நான் உங்கடை பேரைத்தான் சொன்னனான்." எண்டாள் அந்த வட்டன்.

'எடியே நான் ஆரையெடி அப்பிடிச் செய்தனான். இதென்னடி என்னை வில்லங்கப் படுத்திறாய்?" எண்டன்.

போன கிழமை நீங்கள் கோவிலடியிலை வைச்சுக் கும்பிட்டிட்டு வந்த சந்திரா மாமியைத் தோளிலை பிடிச்சு 'எப்பிடிச் சுகமா இருக்கிறியோ பிள்ளை" எண்டு கேட்டனியள் எல்லே. நானும் அதைப் பாத்துக் கொண்டு நிண்டனான்.

உடனை தலை கிறு கிறுத்திது. 'சடார்" எண்டு சைக்கிள் நிலத்திலை விழுகிற சத்தம் கேட்டிது. அவ்வளவு தான். கண்ணைத் திறந்து பாத்தன் என்ரை வீட்டு முத்தத்திலை கிடந்த சாக்குக் கட்டிலிலை படுத்திருக்கிறன்.

அப்பதான் எனக்குத் தெரியும், பள்ளிக் குடத்திலை பிள்ளையளுக்கு விளக்கமில்லாமல் சொல்லிக் குடுக்கிறதாலை வாற விபரீதம் என்ன எண்டு. 'வாத்தியார் பெருமக்களே! என்னத்தையும் சொல்லிக் குடுங்கோ. பறவாயில்லை. சொல்லிக் குடுக்கிறதை விளக்கமாச் சொல்லிக் குடுங்கோ. இல்லாட்டி பெட்டை விளங்கிக் கொண்ட மாதிரி விளங்கினால், யாழ்ப்பாணத்திலை அரைவாசிப் பேர் உள்ளுக்கை தான்?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரவிக்கு ஆப்பு!



கொழும்பு, ஒக்.23

பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கையில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகப் பாரதூரமான பல குற்றச்சாட்டுக்கள் வெளியானால், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால நலன்கருதி அவரை செயற்பாட்டு ரீதியான அரசியலில் இருந்து ஒதுக்கி வைப்பது குறித்து கட்சிக்குள் விரிவான கலந்துரையாடல்கள் நடப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர், அடுத்த மாதத்துக்குள் ஜனாதிபதியிடம் இறுதி அறிக்கை கையளிக்கப்படும்.

அறிக்கையில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன், அவரது மருமகன் அர்ஜூன் அலோசியஸ் ஆகியோர் சம்பந்தமாகக் கடுமையான பரிந்துரைகள் முன்வைக்கப்படலாம் என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் சாட்சியங்களை ஆராய்ந்த பின்னர் சட்ட வல்லுநர்கள் இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிடம் கூறியுள்ளனர்.

இதனடிப்படையில் ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக செயற்படுவது கட்சியின் எதிர்காலத்துக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என கட்சியின் பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர். (ஆ)

## அந்த நாள் ஞாபகம்.....!

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
இலங்கை சுதந்திரக் கட்சி
SRI LANKA FREEDOM PARTY

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

**23.10.2006**

இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

# பொருட்களுக்கு தட்டுப்பாடில்லை

கொழும்பு, ஒக்.23

“பொருட்களுக்கான தட்டுப்பாடு நாட்டில் இல்லை. ஆயினும் பண்டிகைக் காலப்பகுதியில் பாவனையாளர்களுக்குத் தட்டுப்பாடின்றிப் பொருட்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ரி.கே.எம்.பி.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

“பாவனையாளர்களின் வசதி கருதி லங்கா சதொச நிறுவனம் அத்தியாவசியப் பொருட்களை நிவாரண விலைக்கு விநியோகிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நாடு முழுவதிலும் உள்ள சதொச கிளை வலைப்பின்னல், 400 கிளைகளைக் கொண்டதாக விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையின் காரணமாக மூன்று போகங்களில் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

சந்தையில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு இதுவே காரணம். சந்தையில் நிலவும் ஆகக்கூடிய கேள்விக்கு அமைவாக விநியோகம் குறைவடைந்ததனால், பொருட்களின் விலை அதிகரித்தன. வேறு எந்தக் காரணமும் இதற்கு இல்லை. பொருட்களுக்கான தட்டுப்பாடு நாட்டில் இல்லை “என்றும் சதொச நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத பணியாளர்களை பொறுப்பேற்க மாட்டோம்

### வெளிநாட்டுப் பணியகம் அதிரடி


கொழும்பு, ஒக்.23

சட்டவிரோதமாக வெளிநாட்டில் பணியில் ஈடுபடுவோர் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இனிமேல் எந்தவொரு பொறுப்பும் கூறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, வெளிநாடுகளில் சட்டவிரோதமாகப் பணியில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் சிறையில் அடைக்கப்படுதல், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படல் அல்லது மரணம் ஏற்படும் போது அது தொடர்பில் செலவுகள் குறித்து எந்த வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாகப் பணியில் ஈடுபடும் நபர்கள், குறிப்பிட்ட நாடுகளின் சட்டத்தை மீறுவதுடன், இதனால் தண்டப் பணம் செலுத்தல், சிறையில் அடைக்கப்படுதல் முதலான தண்டனைகளை எதிர்நோக்க வேண்டியேற்படும். இது தொடர்பாக தெளிவுபடுத்துமாறு சட்டவிரோதமாக வெளிநாடுகளில் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் உறவினர்களிடம் பணியகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஆ)

# விண்கல் சிக்கியது



கொழும்பு, ஒக்.23

மாத்தறை, திக்வெல்லையில், விண்கல் துகள் எனக் கருதப்படும் ஒரு சிறு கல் துண்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாத்தறை கடற்பகுதியில் கடந்த புதனன்று விண்கல் என்று சந்தேகிக்கப்படும் ஒரு பொருள் விழுந்து வெடித்தது. இந்த நிலையில், மாத்தறை மாவட்டம், திக்வெல்லையின் வீடொன்றின் கூரையில் கல் ஒன்று இருப்பதைக் கண்ட வீட்டு உரிமையாளர், அது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

“கல் ஒன்று வீட்டுக் கூரையில் விழுந்து உருளும் சத்தம் கேட்டது. அது பற்றி நாங்கள் ஒன்றும் பெரிதாக நினைக்கவில்லை. மறுநாள் காலையில் கூரையில் ஏறிப் பார்த்தபோது, எரிந்து போன கல் துண்டு ஒன்று விழுந்திருந்ததைக் கண்டேன். இதையடுத்தே பொலிஸாருக்குத் தகவல் அளித்தேன்” என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இது பற்றி ஆராய்ந்த பொலிஸார், ஆர்தர் சி.கிளார்க் நிலையத்துக்கும் சுரங்கத் துறையினருக்கும் தகவல் அனுப்பியுள்ளனர். தற்போது அந்தக் கல்லுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.



# சீறிப் பாய்ந்த ஆட்லறிகள்

### அச்சத்தில் பனகம மக்கள்

கொழும்பு, ஒக்.23

பனாகொட இராணுவ முகாமில் பெரும் சத்தத்துடன் ஆட்லறித் தாக்குதல் பயிற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், பயிற்சி எனக் கூறி நள்ளிரவுகளில் 122 மில்லி மீற்றர் ஆட்லறி எறிகணைகள் இயக்கப்பட்டுள்ளன.

இந்த எறிகணைப் பயிற்சி யாருடைய உத்தரவிற்கமைய செயற்படுத்தப்படுகிறது என தனக்கு தெரியாதென பனாகொட இராணுவ முகாம் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கமாக , பயிற்சிகளின் போது உண்மையான தோட்டாக்கள் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் அதற்கு மாறாக 22 மில்லி மீற்றர் ஆட்லறி இயக்கப்படுவது என்பது சாதாரண விடயம் அல்ல எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதிக்கான போக்குவரத்து நேற்று நள்ளிரவு முதல் இராணுவப் பொலிஸாரினால் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஆ)

# போலி அபிவிருத்திகளில் இ.தொ.கா ஈடுபடாது



கொழும்பு, ஒக்.23

”இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு போதும் விளம்பரத்துக்காக போலியான அபிவிருத்தி வேலைகளைச் செய்யாது. நாங்கள் முன்னெடுக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் தூய்மையானவை. உறுதியாக நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கக் கூடியவை” என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான். வட்டவளை பிரதேசத்தில் சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தை நேற்று முன் தினம் திறந்து வைத்த பின் உரையாற்றும் போதே , அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“மக்களின் தேவையை அறிந்து ஒரு பாலத்துக்குப் பதிலாக இரண்டு பாலங்களைக் கட்டிக்கொடுத்துள்ளேன். இவை யாவும் நீங்கள் ஒற்றுமையாக இருந்ததனால் தான் செய்ய முடிந்தது இன்று அரசியல் நிலை மாறியுள்ளது. நீங்கள் வீட்டில் இருந்து கூப்பிட்டால் வந்து சேவை செய்யும் அளவுக்கு இன்று அரசியல் யாப்பு மாறிவருகிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப உங்கள் பிரதேசங்களுக்கு தேவையான பிரதிநிதிகளை உங்கள் பிரதேசங்களில் இருந்து நீங்களே தெரிவு செய்து கொள்ள வேண்டும். வெளியிலிருந்து வருபவர்களை ஒரு போதும் தெரிவு செய்யக்கூடாது” என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
திங்கள் 23 ஒக்ரோபர் 2017

# இரட்டை இலை: இழுபடும் விசாரணை



சென்னை, ஒக்.23

இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என்பது தொடர்பான விசாரணை, டெல்லியில் உள்ள தேர்தல் ஆணையக அலுவலகத்தில் நாளை மாலை நடைபெறவுள்ளது.

அதிமுகவில் முதல்வர் பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அணி - தினகரன் அணி ஆகிய இரு தரப்பில், இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என்பது தொடர்பான வழக்கு, தேர்தல் ஆணையகத்தில் உள்ளது. டெல்லியில் உள்ள தேர்தல் ஆணையக அலுவலகத்தில் கடந்த 16 ஆம் திகதி நடந்த விசாரணையின் போது, முதல்வர் பழனிச்சாமி தரப்பினர் அளித்த பிரமாணப் பத்திரங்களில் போலிக் கையொப்பம் இருப்பதாகவும், இது தொடர்பான சாட்சியங்களை விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் தினகரன் தரப்பு கோரியது. ஆனால், தேர்தல் ஆணையகம் இதை ஏற்கவில்லை.

இதனையடுத்து சின்னத்தை முடக்க வேண்டும் என தினகரன் தரப்பு கோரிக்கை விடுத்தது. இதற்கு முதல்வர் பழனிச்சாமி தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து, விசாரணையை 23 ஆம் திகதி மாலை 3 மணிக்கு தேர்தல் ஆணையம் தள்ளிவைத்தது.

விசாரணைகள் முடிவுற்றால் இரட்டை இலை யாருக்கு என்பது நாளை தெரியவரும். (இ)

# தனிமைதான் இனிமேல்



லண்டன், ஒக்.23

பிரிட்டன் பிரதமர் தெரசா மே தனியாக அமர்ந்திருக்கும் புகைப்படம் ஒன்று சமூகவலைத் தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. 28 நாடுகளின் அங்கமான ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதாக அறிவித்தது. அதற்கான பிரேரணையையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.

இந்த நிலையில் இது குறித்து ஆலோசிப்பதற்காக பிரிட்டன் பிரதமர் தெரசா மே ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனால்ட் டஸ்க்கை சந்திப்பதற்கு அறை ஒன்றில் தனியாக அமர்ந்திருந்தார். அவருடன் அதிகாரிகள் யாரும் இல்லாததால், தனியாக அவர் இருக்கும் அந்தப் புகைப்படம் சமூகவலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. "ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதால், பிரிட்டனுக்கு இதுதான் நிலைமை" என்று இணையதள வாசிகள் விமர்சித்துள்ளனர். (இ)

# தனுஷின் சிரிப்பு



சென்னை, ஒக்.23

இந்த வருடம் தீபாவளிக்கு விஜய்யின் மெர்சல் திரைப் படம் பிரமாண்டமாக வெளியானது. இந்தப்படத்துடன் மேயாத மான், சென்னையில் ஒரு நாள் -2 போன்ற சின்ன பட்ஜெட் படங்களும் வெளியாகின. இந்த மூன்று படங்களுமே மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளன.

இந்த நிலையில் நடிகர் தனுஷ் "மேயாத மான் படம் சூப்பர், இப்படி நான் சிரித்து பல நாட்கள் ஆகிறது "என்று ருவிட் செய்துள்ளார். அத்தோடு படக்குழுவினர் அனைவருக்கும் தனது வாழ்த்துக்களையும் கூறியுள்ளார். (இ)

# போர் மூளும்!

## சீனா-வடகொரியா முறுகல்

பீஜிங், ஒக்.23

வடகொரியா மீண்டும் ஒரு ஏவுகணைச் சோதனை மேற்கொண்டால் அது போருக்கு வழிவகுக்கும் என அதன் நட்பு நாடான சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவின் நட்பு நாடான சீனா, வடகொரியாவுடன் போருக்கு ஆயத்தமாவதாகப் பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

"இதுவரை டிரம்ப் அரசு வடகொரியாவுடன் போருக்கு ஆயத்தமாவதாகவே கூறப்பட்டது. ஆனால் உண்மையில் சீனாதான் வடகொரியாவுடன் எந்த நேரத்திலும் தாக்குதலுக்கு ஆயத்தமாக இருக்கின்றது.

வடகொரியாவின் சமீபத்திய செயல்கள் அனைத்தும் மரணத்தை விலைக்கு வாங்கும் பொருட்டே இருக்கின்றன. நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த சீன-வடகொரியா உறவு என்பது முடிவுக்கு வந்துவிட்டது .



வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னின் செயற்பாடுகளால் சீனா அதிபர் சி ஜிங் பிங் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்.

அதனாலேயே இந்த அதிரடி முடிவுக்கு சீனா வந்துள்ளது. இனி வடகொரியா ஒரு ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டாலும் அது கண்டிப்பாக போருக்கான ஆயத்தமாகவே கருதப்படும் " என்று சீனப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ

# அவிழப் போகும் கொலை மர்மம்

வோஷிங்டன், ஒக்.23

அமெரிக்காவின் 35 ஆவது ஜனாதிபதியாக இருந்த ஜோன் கென்னடியின் கொலையின் பின்னால் உள்ள மர்ம முடிச்சுக்களை அவிழ்க்க இப்போதையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அனுமதி வழங்கியுள்ளார்.

ஜோன் கென்னடி 1963 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி டல்லாஸ் நகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.அவரைச் சுட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட குற்றவாளியும் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். ஆனால், ஜோன்கென்னடி கொல்லப்பட்டது ஏன் என்பது இன்றுவரை மர்மமாகவே உள்ளது.கென்னடியின் கொலை தொடர்பான ஆவணங்களை வெளியிட அனுமதிக்கப் போவதாக அதிபர் டிரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தேசிய காப்பகம், இந்தக் கொலை தொடர்பான பெரும்பாலான ஆவணங்களை ஏற்கனவே வெளியிட்டு விட்ட நிலையில், கடைசிக் கட்ட ஆவணம் மட்டும், இன்னும் பூட்டப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.மேலும் தகவல்களைப் பெறும் பொருட்டு, அதிபர் என்ற முறையில், பல ஆண்டுகளாக பூட்டப்பட்டு இருந்த கென்னடியின் ஆவணங்களைத் திறக்க நான் அனுமதிப்பேன்ஹ என்று டிரம்ப் ருவிட்டரில் தெரிவித்துள்ளார். (இ)

# விஷ வாயுத் தாக்குதல்: ஐ.எஸ் அடுத்த திட்டம்

பேர்லின், ஒக்.23

ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் விஷ வாயு தாக்குதலை நடத்த ஐ.எஸ் ஆதரவாளர்கள் திட்டமிட்டு வருவதாக உளவுத்துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறித்த தாக்குதல்கள் ரயில் நிலையம், சுரங்கப் பாதைகள், விமானம் போன்றவற்றில் நடத்தப்படலாம் என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ் அமைப்பு கடும் நெருக்கடியை எதிர்கொண்டு வரும் நிலையில், குறித்த அமைப்பின் ஆதரவாளர்கள் ஐரோப்பாவில் உயிரியல் ஆயுதங்களால் தாக்குதல் நடத்தத் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. பொதுமக்கள் பயன்படுத்தும் ரயில் மற்றும் விமான சேவைகளிலும் சுற்றுலாப்பயணிகள் குவியும் பிரதேசங்களிலும் இந்தத் தாக்குதல் நடைபெறலாம் என ஜேர்மனியின் பிரபல பத்திரிகை ஒன்று எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.


ஐரோப்பாவில் பல நகரங்களிலும்



தொடர்ந்து கத்தியால் தாக்குதல் நடத்தப்பட்டு வரும் நிலையில், இரசாயனத் தாக்குதலும் நடைபெறும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமையால், பல நாடுகள் தமது பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியாவில் கடந்த ஜூலை மாதம் விமானத்தில் மேற்கொள்ளப்பட்ட இரசாயனத் தாக்குதல் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# டைட்டானிக் கடிதம் பிரிட்டனில் ஏலம்





லண்டன், ஒக்.23

1912 ஆம் ஆண்டு சொகுசுக் கப்பலான "டைட்டானிக்" கடலில் மூழ்கியதில் சுமார் 1,500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

மிகப்பெரிய பயணிகள் கப்பலான டைட்டானிக், பிரிட்டனின் சவுத்தாம்டனில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்துக்குச் செல்லும் வழியில் அட்லாண்டிக் கடலில் பனிப்பாறையின் மீது மோதி உடைந்து கடலில் மூழ்கியது.

அப்போது உயிரிழந்தவர்களில் ஒருவரான அமெரிக்காவின் ஹோல்வர்சன் என்பவர் தனது தாய்க்கு எழுதிய கடிதத்தை, அந்த விபத்தில் உயிர் தப்பிய ஒருவர் எடுத்து வைத்துள்ளார்.

அந்தக் கடிதம் பலரிடம் கைமாறிய நிலையில் பிரிட்டனின் வில்ட்சயர் நகரில் ஏலத்துக்கு வந்துள்ளது. இந்தக் கடிதத்தில் கப்பலில் பயணம் செய்த பல்வேறு பயணிகள் குறித்தும் ஹோல்வர்சன் எழுதியுள்ளார்.

இந்தக் கடிதம் எண்பதாயிரம் பவுண்ட்ஸுக்கு ஏலம் விடத் திட்டமிடப்பட்டுள்ளது. (இ)

# பாலைவன அகதி முகாம்

பரிஸ், ஒக்.23

பிரான்ஸின் கிளாசிக் நகரில் இருந்த ஜங்கிள் அகதிகள் முகாம் மூடப்பட்டு, ஒரு ஆண்டு ஆகியுள்ள நிலையில், தற்போது அந்த முகாம் இருந்த இடம் பாலைவனம் போன்று காட்சியளிக்கிறது.

பத்தாயிரத்துக்கும் அதிகமான அகதிகள் வசித்து வந்த ஜங்கிள் அகதிகள் முகாம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் முற்றாக மூடப்பட்டது.

அங்கு தங்கியிருந்த மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள். ஜங்கிள் முகாமில் இருந்த அகதிகள், பிரிட்டனுக்கு சட்டவிரோதமாகத் தப்பி சென்றதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நிலையில், மக்கள் கூட்டம் நிறைந்த கூடாரங்கள், வீடுகள் எனக் கலகலப்பாக இருந்த ஜங்கிள் அகதிகள் முகாம் பகுதி தற்போது ஆள் நடமாட்டமில்லாத பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சறுக்கியது இந்தியா நியூசிலாந்து அபாரம்




மும்பை, ஒக்.23

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள நியூஸிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நேற்று நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணிக்கு ஷிகர் தவான் (9), ரோகித் சர்மா (20) இணை சுமாரான தொடக்கத்தை ஏற்படுத்தியது. கேதர் ஜாதவ் (12) ஏமாற்றினார். தினேஷ் கார்த்திக் (37) ஓரளவு கைகொடுத்தார். தோனியும் (25) நிலைக்கவில்லை. மறுமுனையில் அபாரமாக ஆடிய அணித்தலைவர் விராட் கோஹ்லி, தனது 200 ஆவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்தார். ஹர்திக் பாண்டியா 16 ரன்னில் வெளியேறினார். கோஹ்லி 121 ரன்னில் ஆட்டமிழந்தார். புவனேஷ்வர் குமார் (26) ஓரளவு கைகொடுத்தார்.

இந்திய அணி 50 ஓவர் நிறைவில், 8 விக்கெட்டுக்கு 280 ரன்கள் எடுத்தது. நியூசிலாந்து சார்பில் போல்ட் 4 விக்கெட்டையும், டிம் சவுத்தி 3 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சவாலான இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணியின் கோலின் முன்ரோ 28 ஓட்டங்களுடன் வெளியேறினார். அணித் தலைவர் வில்லியம்சன் 6 ஓட்டங்களுடன் குல்தீப் பந்தில் வீழ்ந்தார். பாண்டியா "வேகத்தில்" மார்ட்டின் குப்டில் 32 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். ஆயினும் அதன் பின்னர் இணைந்த ரோஸ் டெய்லரும், ரொம் லாதமும் நியூசிலாந்து அணியைத் தூக்கி நிறுத்தினர். இந்தியப் பந்துவீச்சை எளிதாக சமாளித்த லாதம் சதமடித்தார். மறுமுனையில் அசத்திய ரோஸ் ரெய்லர் சதமடிக்க முனைந்து 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நியூசிலாந்து அணி 49 ஓவரில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 284 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. லாதம் (103), நிகோல்ஸ் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் பும்ரா, குல்தீப், பாண்டியா, புவனேஷ்வர் குமார் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக லாதம் தெரிவானார். இந்த வெற்றி மூலம் 1-0 என தொடரில் நியூசிலாந்து முன்னிலை பெற்றுள்ளது. (அ)




# வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்கா

ஈஸ்ட் லண்டன், ஒக்.23

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரை வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்கா. 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் முதலிரு போட்டிகளையும் வென்று , கிண்ணத்தை தனதாக்கியிருந்த தென்னாபிரிக்கா, நேற்றைய போட்டியிலும் வெற்றி பெறும் வேட்கையுடன் களம் புகுந்தது. ஆனாலும் ஆறுதல் வெற்றியையேனும் பெற்றுவிட பங்களாதேஷ் துடித்தது.

ஈஸ்ட் லண்டனில் நேற்று நடைபெற்ற இந்த மூன்றாவது போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா விக்கெட் இழப்புப் பற்றி கவலையில்லாமல் அடித்தாட முற்பட்டது. அதனால் விக்கெட்டுக்கள் வீழ்ந்த வண்ணம் இருந்தாலும் ஓட்டமும் எகிறிக் கொண்டே போனது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக சதத்தை எட்டும் தருணத்தில் அணித்தலைவர் டு பிளஸிஸ் காயம் காரணமாக, 91 ஓட்டங்களுடன் மைதானத்தை விட்டு வெளியேறினார். கடைசி நேரத்தில் களம் புகுந்த ரபாடாவின் மூன்று சிக்ஸர்களின் உதவியுடன், 50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 369 ஓட்டங்களைப் பெற்றது. ரபாடா 23 ஓட்டங்களுடனும், பெஹார்டியன் 33 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

370 என்ற இமாலய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுக்களை தென்னாபிரிக்கப் பந்து வீச்சு சிதறடித்தது. அந்த அணியின் சஹிப் அல் ஹசன் மட்டும் நிலைத்து, நின்றாடி 69 ஓட்டங்களைப் பெற்றார். 40.4 ஓவர்களிலேயே தென்னாபிரிக்கத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் 169 ஓட்டங்களுடன் பணிந்தது பங்களாதேஷ்.

தென்னாபிரிக்க அணி சார்பில் பீற்றர்சன் 3 விக்கெட்டுகளையும், இம்ரான் தாஹீர், மர்க்ரம் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக டு பிளஸிஸும், தொடர் நாயகனாக குயிண்டன் டி கொக்கும் தெரிவாகினர். (அ)




## மகாலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட்:

# சம்பியனானது திருநெல்வேலி

யாழ்ப்பாணம், ஒக். 23

வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தி வந்த இருபது-20 கிரிக்கெட் தொடரின் சம்பியனாக திருநெல்வேலி அணி தெரிவானது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி அணி மோதியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 129 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 130 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பல்கலைக் கழக அணி, 19 ஓவர்களில் 105 ஓட்டங்களை மாத்திரம் சேர்த்த நிலையில், சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதனால், திருநெல்வேலி அணி, 24 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டு சம்பியனாகியது. (ஐ)

**அரியாலையில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.


இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இளைஞன் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை மற்றொரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர் குறித்த இளைஞனை பின்புறமாக துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை குறித்த நபர் வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்ததாகவும் அவருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகவும் குறிப்பிட்டுள்ள உறவினர்கள் இதோ வெளிக்கிட்டு வந்து விடுகின்றேன் எனக் கூறி விட்டு வெளிக்கிட்டுச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ் பிராந்திய பொலிஸார் மற்றும் தடயவில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற பகுதியில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் காயமடைந்த இளைஞனுடன் சென்றதாகக் கூறப்படும் அவரது நண்பரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் இன்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும். (எ)

# புதிய அரசியல் யாப்பில் ஒப்பமிட மாட்டேன்



நாட்டைப்பிரிக்கும், நாட்டை துண்டாடும், பௌத்த மதத்துக்கு அல்லது வேறு சமயங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்த எந்தவொரு அரசியலமைப்பும் சட்டமாக்கப்படுவதற்கு தேவையான சபாநாயகர் ஒப்பத்தை தான் ஒரு போதும் இடமாட்டேன் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று ஹீரகம தேவமாதா தேவாலயத்தில் இடம்பெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் சபாநாயகர் இதனைக் கூறியுள்ளார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நான் பாராளுமன்றத்தில் சபாநாயகராக உள்ளேன். இது வரை புதிய அரசியல் யாப்பைக் கண்டதில்லை. அப்படியொன்றை அறியவும் இல்லை. எந்வொருவருக்கும் யோசனைகளை முன்வைக்க முடியும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் முடியும். சிலவேளை இந்த யோசனைகள் நாட்டைப் பிரிக்கும், நாட்டைத் துண்டாடும் யோசனைகளாகவும் இருக்கலாம் எதுவாக இருந்தாலும் அது அரசியலமைப்பாக ஏற்றுக்கொள்ளப் படுவது சபாநாயகரின் இறுதி ஒப்பத்தின் பின்னரேயாகும்" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எதிரொலி
Ethiroli

# முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் புனரமைப்பு



முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. கார்த்திகை மாதம் தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப் படவுள்ள நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட துயிலுமில்லங்கள் யாவும் அந்தந்தப் பிரதேச மக்களால் சிரமதானம் செய்யப்பட்டு வருகிறது. அதன் ஒரு அங்கமாக முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் பிரதேச மக்களால் சிரமதானம் செய்யப்படுகிறது. (எ)

## ஸப்பா.... சமாளிக்க முடியேலையே!




## அவப்பெயர்

நல்லாட்சி என்ற சொல்லுக்கே இந்த அரசாங்கம் பாரிய அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நிர்மால் ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்களுள் ஒருவரான இவர்,நேற்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் கூறியுள்ளார்.

ஜனவரி 8 ஆம் திகதி இந்த அரசாங்கத்தை மக்கள் ஆட்சியில் அமர்த்துவதற்கு காரணம் இந்த ஆட்சியாளர்கள் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை அல்ல. மாறாக, மஹிந்த ராஜபக்ஷக்களின் ஆட்சியில் சில அம்சங்கள் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பே ஆகும். - என்றார். (எ)



# அரசியலமைப்பை உருவாக்குவதைவிட வேறு வேலை இருந்தால் பாருங்கள்

தற்போதைய நிலையில் புதிய அரசியலமைப் பொன்றை உருவாக்குவதைவிட, நாட்டிலுள்ள வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கவனத்தைச் செலுத்துவது சிறந்தது எனத் தெரிவித்துள்ள கோட்டே ஸ்ரீ கல்யானி சாமசிறி சங்க சபையின் கோட்டே பிரிவின் போஷகர் பெல்லன்வில விமலரத்ன தேரர், புதிய அரசியலமைப் பொன்று அவசியம் இல்லையென தமது சங்க சபை தீர்மானம் எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று கோட்டே ரஜமகா விகாரை சங்க சபையின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த தேரர்,

"அரசியலமைப்பு முன்மொழிவுகள் தொடர்பில் இன்று கூடிய சங்க சபை ஆராய்ந்தது. இதிலுள்ள விடயங்களை நன்கு ஆராய்ந்ததன் பின்னரேயே இதனை முற்றாக நிராகரிக்க வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினையைத் தீர்க்க புதிய அரசியலமைப்பு அமைக்கப் போனால் வேறு ஒரு பாரிய பிரச்சினை புதிதாக உருவாகிவிடும். நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் உள்ளன. அவையும் தீர்க்கப்பட வேண்டும். தற்போதைய அரசியலமைப்பில் குறைகள் இருப்பதாயின் அவற்றைச் சீர்செய்வதில் தவறில்லை" - என்றார். (எ)







அரசியல் கைதியான விவேகானந்தனூர் சதீஸ் எழுதிய "சிறையிலிருந்து சிங்களச் சகோதரனுக்கு" நூல் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றுள்ளது. நூல் வெளியீட்டின் பின்னராக, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

## நாவற்குழியுடன் ரயில் நிறுத்தம்

வடக்கு ரயில் சேவை இன்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை நாவற்குழியுடன் இடைநிறுத்தப்படும் என ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

நாவற்குழி பாலத்தில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டே குறித்த சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.(எ)



அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. லண்டன் இளையோர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் புலிக்கொடிகளை ஏந்தியவாறு நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றினர். (எ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி
Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 23.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.